

மனிதவள மேலாண்மைத்துறை மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழிசெல்வராஜ் தலைமையில் 07.12.2025 அன்று புனித ஜார்ஜ்கோட்டை வளாகத்தில் உள்ள PALM GROVE SAINIK INSTITUTEல் படைவீரர் கொடி நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே, அரசு துணைச் செயலாளர், பொது (முன்னாள் படைவீரர்)த்துறை மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறையின் இயக்குநர் கே.பாலசுப்பிரமணியம், அரசு பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தாக்கர், தென் பிராந்திய இராணுவ தளபதி MAJOR GENERAL RM SRINIVAS, முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் ம.எட்வர்ட் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த – பெற்றோரை இழந்து வாடும் நான்கு குழந்தைகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

# இனி இந்த நான்கு குழந்தைகளும் நம் அரசின் குழந்தைகள்! தாயும் தந்தையுமாய் நமது ‘திராவிட மாடல்’ அரசு என்றும் இருக்கும்!

### சமூக வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி!

சென்னை, டிச.09-

கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெற்றோரை இழந்துவாடும்

நான்கு குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கியதை யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில்,

“இந்த நான்கு குழந்தைகளும் இனி நம் அரசின் குழந்தைகள்! தாயும் தந்தையுமாய் நமது திராவிட மாடல் அரசு என்றும் இருக்கும்” என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**இந்த நான்கு குழந்தைகளும் இனி நம் அரசின் குழந்தைகள்! அவர்களது எதிர்காலத்தை அரசு பாதுகாக்கும்!**

**சொன்னபடியே,**

**இலாவண்யாவிற்கு ரூ.2.50 லட்சம் வீட்டுமனைப் பட்டா, ரூ.3,55,660 மதிப்பீட்டில் ‘கலைஞர் கனவு இல்லம்’ வழங்க ஆணை.**

**சங்கராபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கணினி உதவியாளர் பணி நியமன ஆணை;**

**ரிஷிகா மற்றும் அபினேஷிற்கு - ‘அன்புக்கரங்கள்’ திட்டத்தின் மூலம் மாதந்தோறும் தலா ரூ.2000 உதவித்தொகை;**

**ரீணாவிற்கு திறன் அழகுக் கலை பயிற்சி பெறுவதற்காக ரூ.6000 ஆகியவற்றை வழங்கினேன்.**

**நாளை எனும் நம்பிக்கையைப் பற்றிக்கொண்டு வாழ்வில் அவர்கள் உயர்ந்திட தாயும் தந்தையுமாய் என்றும் இருக்கும் நமது திராவிட மாடல் அரசு!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### திருவண்ணாமலையில் தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணியினர்

# வெண் நிறம் சீருடை அணிந்து எழுச்சியுடன் பங்கேற்போம்!

### மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் டிச 08;

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் காக்களூரில் நடைபெற்றது இதில் மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமை வகித்தார் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பூவிருந்தவல்லி தொகுதி பார்வையாளர் PTC செல்வராஜ், ஆவடி தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிகா, மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இக்கூட்டம் முன்னதாக ஒன்றிய செயலாளர் ஆர். ஜெயசீலன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார், ஆகியோர் வரவேற்புரையாற்றினார் இதில்

இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு



பல்வேறு ஆலோசனை வழங்கினார் அப்போது பேசிய அமைச்சர்

திருவண்ணாமலையில் திமுக இளைஞர் அணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு வரும் 14ம் தேதி மாலை 4 மணிக்கு திருவண்ணாமலை கலைஞர் திடலில் நடைபெறுகிறது இதில்.

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

எனவே திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கிளை கழக வார்டு கழக இளைஞரணி அமைப்பாளர்கள் அமைப்பாளர்கள் அமைப்பாளர்கள் அனைவரும் பெருந்திரளாக நடைபெறும் கூட்டத்திற்கு பங்கேற்க வேண்டும் இதற்கான ஏற்பாடுகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் உள்ள இளைஞரணி நிர்வாகிகளை அழைத்து வர வேண்டும் குறிப்பாக பங்கேற்கும் இளைஞரணி நிர்வாகிகள் வெண்ணிறம் சீருடை அணிந்து ராணுவ கட்டுக்கோப்பு போல் திகழ வேண்டும் என தெரிவித்துக் கொண்டார்

தொடர்ந்து பேசிய அவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைகிணங்க திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்றத் தொகுதியில் ரூபாய் 1,460 கோடிக்கும் அதிகமான திட்டங்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கியதற்கு திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி பேருந்து நிலைய அருகில் சீரமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையை திறந்து வைத்ததற்கு

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் கூட்டத்தில் வாயிலாக நன்றிகள் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

துணை முதல்வர் வருகையின் போது சிறப்பான முறையில் வரவேற்பு அளித்த திருவள்ளூர் மத்திய மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக இளைஞரணி துணை அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்களுக்கு பாராட்டுகளையும் நன்றியையும் கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்

SRI சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணியில் சிறப்பாக செயல்பட்ட திருவள்ளூர் மத்திய மாவட்ட நிர்வாகிகள் வழக்கறிஞர்கள் பாகம் முகவர்கள் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் அனைவருக்கும் கூட்டத்தின் வாயிலாக நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம் என சிறப்புரையாற்றினார்

மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் சன்பிராகஷ், டி. தேசிங்கு, டி.முரளி கிருஷ்ணன், ஜி.ஆர்.திருமலை, ப.ச.கமலேஷ், என்.இ.கே. மூர்த்தி, பொன்.விஜயன், ஜி.ராஜேந்திரன், தி.வே.முனுசாமி, தி.வை.இரவி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள். ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், ஏ.டி.பிரியா குமார், ஆவடி மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜி. துர்கா பிரசாத், மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி இந்நாள் முன்னால் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் இளைஞர் அணியை சேர்ந்த மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள் .

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 292 வது நாள்!

### வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,டிச.9-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 292 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (08.12.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 104 ஆ, நாவலர் நகர், அண்ணா நகர் மேற்கு, 2) வட்டம் 104, 11வது பிரதான சாலை, அண்



ணாநகர் மேற்கு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ. ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன். எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர். தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமா சங்கர், சொ.முருகேசன், ப. லோகுபாபு, K.S.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ‘திராவிட மாடல்’ அரசு அளித்த ஊக்கம்!

# ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத் (UPSC) தேர்வில் வரலாறு காணாத சாதனை!



ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UNION PUBLIC SERVICE COMMISSION) ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட அரசியலமைப்பு நிறுவனமாகும். வெவ்வேறு அரசின் பணிகளுக்கு நியமனம் செய்ய தேர்வுகள் நடத்துவது இந்நிறுவனத்தின் முக்கியப் பணியாகும். குறிப்பாக, இந்திய ஆட்சிப்பணிகள் (IAS), இந்திய வெளிநாட்டுப் பணிகள்(IFS), இந்திய காவல்துறைப் பணிகள் (IPS) ஆகிய பணிகளுக்கான தேர்வுகளை நடத்துவது வழக்கமாகும். இத்தேர்வுகள் மூன்று நிலைத் தேர்வுகளாக நடத்தப்படுகின்றன. முதல் நிலைத் தேர்வு, முக்கியத் தேர்வு மற்றும் நேர்காணல் தேர்வு என்று மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் நாடு முழுவதிலுமிலிருந்து பல இலட்சம் மாணவர்கள் முதல்நிலைத் தேர்வினை எழுதி வருகின்றனர்.

தமிழ்நாட்டிலிருந்தும் மாணவ மாணவிகள் பல ஆயிரம் பேர் வருடந்தோறும் யு.பி.எஸ்.சி. தேர்வினை ஆர்வத்துடன் எழுதி வருகின்றனர். ஆனாலும் கடந்த பத்து ஆண்டுகளாக மிகக் குறைந்த அளவிலான மாணவர்களே முதல் நிலைத் தேர்வில் வெற்றிபெற்றுள்ளனர். இது மிகுந்த கவலைக்குரிய நிலைமையாகக் கருதப்பட்டது. அதே தருவாயில், தமிழ்நாட்டில், பள்ளிப்படிப்பை முடித்து, உயர்கல்விக்குச் செல்பவர்கள் சதவிகிதம் (GROSS ENROLLMENT RATE-GER) இந்திய அளவில் 27.1% இருக்கும் தருவாயில், இந்தியாவிலேயே மிக அதிகமாக 51.4 சதவிகிதமாக உயர்த்திருந்தும், இந்தியக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் தமிழக உயர்கல்வி நிறுவனங்கள் முதல் 50 இடங்களில் இருந்தும், கல்விக்காகவும், பயிற்சிக்காகவும் நிதி ஒதுக்கீடுகள் இருந்தும் கடந்த அ.தி.மு.க ஆட்சியாளர்கள் காலத்தில், யு.பி.எஸ்.சி. யில் தேர்ச்சி பெற்ற தமிழக மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது.

குறிப்பாக 2016-17 வருடத்தில் அதிகபட்சமாக 27 மாணவர்களே தேர்ச்சி பெற்றனர். பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், கடைசி மாநிலமாகத்தான் மாணவர்களின் வெற்றி இருந்தது. தமிழகக் கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகமின்மையினை ஏற்படுத்தியது.


**முனைவர் க.திருவாசகம்**
முன்னாள் துணைவேந்தர் :
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்
சென்னை பல்கலைக்கழகம், சென்னை
அமெட் பல்கலைக்கழகம், சென்னை




இந்நிலையினை ஆராய்ந்து உணர்ந்த திராவிட மாடல் அரசு மற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மற்றும் ஆளுமை மேம்பாட்டுத்துறையின் (SKILL DEVELOPMENT) அமைச்சர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எடுத்த சிறப்பு மற்றும் சிறந்த நடவடிக்கைகளால், யு.பி.எஸ்.சி. தேர்வில் தமிழக மாணவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வந்துள்ளது. யு.பி.எஸ்.சி. முதல்நிலை தேர்வில் (PRELIMINARY EXAM) 2021ஆம் ஆண்டு 234, 2022ல் 403, 2023ல் 585, 2024ல் 632, 2025ல் 732 மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

நாடு முழுவதும் 14,161 பேர் முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்ற நிலையில், தமிழ்நாடு மட்டும் 4.94% தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர். 2025 ஆம் ஆண்டு முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்ற 732 பேரில் 315 (40.2%) மாணவ மாணவியர்கள் தமிழக அரசின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயிற்சியும் பயனும் பெற்றவர்கள் ஆவர்.

யு.பி.எஸ்.சி.யின் முதன்மைத் தேர்வில் (MAIN EXAM) 2024 ஆம் ஆண்டு 136 பேர், 2025ஆம் ஆண்டில் 155 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று, தமிழ்நாட்டின் வரலாற்றில் அதிக அளவில் வெற்றி பெற்றுள்ளனர். இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், இந்த ஆண்டு, 2025ல் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 155 பேரில், 87 பேர் (56.13%) மாநில அரசின் AICSCC (ALL INDIA CIVIL SERVICE COACHING CENTRE) பயிற்சி மையத்தில் பயின்றவர்கள். இம்மையத்தின் தேர்ச்சி விகிதம் கடந்த ஆண்டில் சுமார் 35% இருந்த நிலையில், இந்த ஆண்டு, அது 77% ஆக உயர்ந்துள்ளது. இது மிகப்பெரிய முன்னேற்றமாகும்.

இறுதித் தேர்வான நேர்காணலில், 2024-25 ஆம் ஆண்டு 57 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று IAS, IFS, IPS மற்றும் நடுவண் அரசின் 24 பதவிகளுக்கு நியமனம் பெறத் தகுதி பெற்றுள்ளனர். முந்தைய ஆண்டுகளில் அதிகபட்சமாக 35 பேர் மட்டுமே தகுதி பெற்ற நிலையில், இந்த ஆண்டு 55 ஆக உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வெற்றியின் பின்னணியில், தமிழக அரசின் திட்டமிட்ட செயல்திட்டங்களே முக்கியக் காரணம். தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை 2024-25னை 24 ஏப்ரல் 2025ல் சமர்ப்பித்தபோது, முதல்வர் அவர்கள், தம் உரையில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் வருடத்திற்கு 1000 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, யு.பி.எஸ்.சி. தேர்விற்கான தயாரிப்பிற்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்று தெரிவித்தார்கள். அத்துடன் ரூ.40 கோடி மதிப்பீட்டில், மிக நவீன வசதிகளுடன் கூடியதும், வருடத்திற்கு 500 மாணவ மாணவியருக்கு போட்டி தேர்விற்கு பயிற்சி அளிக்க, ஒரு பயிற்சி கூடம் தங்கும் இடம், நூல்நிலையம், சென்னையில் அண்ணாநகரில் உள்ள செனாய் நகரில் கட்டப்படும் என்று கூறினார்கள். அதன் விளைவாகவே, நான் முதல்வன் திட்டம் மற்றும் AICSCC மூலம் தீவிர பயிற்சிகள் அளிக்கப்பட்டு, பெரும் அளவில் மாணவர்கள் தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

**நான் முதல்வன் திட்டம்:**

மாணவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை, சிறப்பு பயிற்சி, மற்றும் நேர்காணல் தயாரிப்பிற்கான நிதி உதவி தமிழக அரசால் வழங்கப்படுகின்றது. முதல்நிலை தேர்விற்கு (PREMILINARY EXAM) தயாராகும் மாணவர்களுக்கு மாதம் ரூ.7000மும், முக்கிய நிலைத்தேர்விற்கு (MAIN EXAM) மாணவருக்கு மாதம் ரூ.25,000மும், நேர்காணலுக்கு (INTERVIEW) தயாராகும் மாணவர்களுக்கு மாதம் ரூ.50,000 உதவித்தொகை (SCHOLARSHIP) வழங்கப்படுகின்றது.

**தமிழ்நாட்டின் அரசுப் பயிற்சி மையம் (AICSCC):**

தமிழ்நாட்டின் அரசுப் பயிற்சி மையத்தில், தங்குமிடத்துடன் கூடிய பயிற்சி (RESIDENTIAL COACHING), கட்டுப்பாடான படிப்பு சூழல், மாதிரித் தேர்வுகள் நடத்துதல் (MOCK TEST) மற்றும் நேர்காணல் பயிற்சி வகுப்புகள் (INTERVIEW TRAINING) நடத்தப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் 225 இடமே இருந்த நிலையில், கூடுதலாக மாணவர்களுக்கு இடமளித்து, பயிற்சி வழங்கும் திறன் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

சாதனை தந்த தாக்கம்:

- யு.பி.எஸ்.சி. வாய்ப்புகளில் இனி செல்வந்தர்களுக்கு மட்டும் அல்ல, முதல் தலைமுறை மாணவர்கள், கிராமப்புற மாணவர்கள், ஏழை எளிய மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் வாய்ப்புகளும், வசதிகளும் அளிப்பதன் மூலம் திராவிட மாடல் அரசால், சமூகத்தில் ஒரு சமத்துவப் புரட்சியினை உருவாக்க முடிகின்றது.
- அரசு தனிக்கவனம் செலுத்தி, திட்டமிட்டு, நிதி ஆதாரம் அளித்து உதவினால், போட்டித் தேர்வுகளில் ஜனநாயகமான அணுகுமுறையினை உருவாக்க முடியும் என்பதை திராவிட மாடல் அரசு நிரூபித்துள்ளது.
- மாநிலத்தில் தேசிய நிர்வாகத்தின் பங்கு அதிகரித்துள்ளது.
- தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் கண்ட கனவான சமத்துவம், சமூக நீதி, சமூக, பொருளாதார மேம்பாடு நிறை வேற்றப்படுகின்றது.
- வரும் ஆண்டுகளில் யு.பி.எஸ்.சி. பயிற்சி மையங்களின் எண்ணிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டு, பிற மாவட்டங்களிலும் செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- பொருளாதாரரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு ஊக்கத்தொகையினை உயர்த்தி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- வெற்றி பெற்ற மாணவர்களின் பயிற்சி மற்றும் தேர்வு அனுபவங்களை, தேர்வுகள் மற்றும் நேர்காணல்களுக்கு தயாராகும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் PEER-MENTORING முறை அமுல்படுத்தப்படவுள்ளது.

தமிழக அரசின் திறம்பட்ட நடவடிக்கைகள், திட்டமிட்ட செயலாக்கம், தேவையான நிதி ஒதுக்கீடு காரணமாக யு.பி.எஸ்.சி. தேர்ச்சி எண்ணிக்கையில் தமிழ்நாடு ஒரு புதிய உயரத்தை நோக்கி செல்லும் என்பது திண்ணம்.

### தருமபுரி மாவட்டத்தில்

# தொழிற்பயிற்சி ஊக்குவிப்பு திட்டத்தின் அமலாக்கம் - செயல்பாடுகள் என்ன?

### மக்களவையில் ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, டிச. 9 -

தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு பிரதான் மந்திரி தேசிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறதா? தமிழ்நாட்டில் தொழில் பயிற்சி ஊக்குவிப்பு திட்டதினையும் (NAPS) அதன் முக்கிய நோக்கங்கள், கூறுகளையும் செயல்படுத்தி உள்ளதா? குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் பிரதான் மந்திரி தேசிய திட்டத்தினை எவ்வாறு ஒன்றிய அரசு செயல்படுத்தி உள்ளது?

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் மாவட்ட வாரியாக புள்ளிவிபரங்களு டன் தொழில்ப



யிற்சி ஊக்குவிப்பு திட்டத்தின் (NAPS) கீழ் சேர்ந்து பயிற்சி பெற்று, சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள பயிற்சியாளர்களின் எண்ணிக்கை என்ன?

தருமபுரி மாவட்டத்தில் தொழில்பயிற்சி ஊக்குவிப்பு திட்டத்தின் (NAPS)கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில்கள், சிறு, குறு, மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME),உள்ளிட்ட கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை என்ன? கடந்த 5 ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் இது வரை தருமபுரி மாவட்டத்தில் அந்நிறுவன முதலாளிகளுக்கு திருப்பி வழங்கப்பட்டுள்ள உதவித்தொகையின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிராமப்புற, பழங்குடியின,மற்றும் பின்தங்கிய பகுதிகளில் தொழில் கல்வி ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், உள்ளூர் தொழில் முனைவோரிடையே இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பு பயிற்சி மற்றும் வாய்ப்புகளை மேம்படுத்தவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

என்று நாடாளுமன்றத்தில் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சர் ஜெயந்த் சௌத்ரியிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.